இணைப்பு I

[400-ம் பக்கத்தில் 326-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

திரைப்படத் தொழில் நுட்பவியல் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற வசதிகள் பற்றி விவரங்கள்.

நிதி உதவி—

(1) இக் கல்லூரியில் சேர்க்கப்படும் தகுதியுள்ள மலைசாதி/நாடோடி வகுப்பினர் மற்றும் குறைந்த வருமானப் பிரிவு மாணவர்களுக்கு இந்திய அரசு திட்ட உதவித் தொகை, அரிசன நல இயக்குநரால் ஒவ்வோராண்டும் வழங்கப்படுகிறது.

(2) பிற்பட்டோர் நல இயக்குநரால் பின்தங்கிய, மிகவும் பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வோராண்டும் உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

(3) மேற்குறித்த இருவகை மாணவர்களும் இக் கல்லூரியில் படிப் புத் தொகை செலுத்துவதினின்றும் தமிழ்நாடு கல்வி சம்பந்தப்பட்ட விதி 92-இன்படி விதி விலக்களிக்கப்படுகிறார்கள்.

(4) சேர்க்கப்படும் மாணவர்களில் 50 விழுக்காடு மாணவர்களுக்கு அவர்களுடைய பெற்றோரது ஆண்டு வருமானம், மாணவர்களுடைய படிப்பின் தகுதி முதலியவற்றின்பேரில் இத்துறையினரால் ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ. 40 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(5) தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று மாணவர்களுக்கு (அவர்கள் படிப்பு முடியும் வரை) படிப்புக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுகிறது.

(6) கேரள மாநிலத்திலிருந்து இங்கு வந்து பயிலும் தகுதியுள்ள மாணவர்களுக்கு அம்மாநிலத் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரால் ஒவ்வொரு மாதமும் ரூ. 85 வீதம் படிப்பு முடியும் வரை வழங்கப்பட்டு வருகிறது.

(7) ஒரிஸ்ஸா மாநிலத்திலிருந்து இங்கு வந்து பயிலும் தகுதியுள்ள மாணவர்களுக்கு அம் மாநிலத் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரால் ஒவ்வொரு மாதமும் ரூ. 100 வீதம் படிப்பு முடியும் வரை வழங்கப் படுகிறது.

கல்வி வசதி—

இந்தக் கல்வி நிறுவனத்தில் நடிப்பு, படத் தொகுப்பு, திரைக்கதை வசனம் எழுதுதல், படம் இயக்குதல், சினிமா நிழல் படம் எடுத்தல்,

[1972 ஆகஸ்ட் 25

ஒலிப்பதிவு செய்தல், படம் கழுவுதல் ஆகிய துறைகளில் மாணவர் களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. ஒவ்வொரு துறைக்கும் வேண்டிய கருவிகளைக் கொண்டும் அந்தத் துறையில் பயிற்சிப் பெற்ற ஆசிரியர்களைக் கொண்டும் பாட முறையிலும், செய்முறையிலும் பயிற்சி அளிக்கப்படு கிறது. இறுதியாண்டு மாணவர்கள் செய்முறைப் பயிற்சியாக அவர்களே ஒரு படம் தயார்செய்து காட்டுவதற்கு வேண்டிய வசதிகள் அளிக்கப்படுகின்றன. அதற்காகத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் போதிய நிதி உதவியளித்து வருகிறது. மாணவர்களுக்கு விடுதி வசதி களும் அளிக்கப்பட்டுள்ளன.

இணைப்பு 2

[429-ம் பக்கத்தில் 353-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

Particulars of lands belonging to Religious Institutions in Madras City which have been given to the Tamil Nadu Slum Clearance Board for executing Slum Clearance Schemes.

Pallakku Manyam Slum in Mylapore.	*T.S. number.*	*C.*	*G.*	*s.ft.*
1 Thiruvannamalai Adhinam—Kundrakudi, Ramanathapuram District	3331/1	1	16	2243
2 Sri Kapaliswarar temple, Mylapore, Madras-4	3332	0	1	2,100
	3333	2	7	1.324
	3340	0	1	,535
	3341	2	9	1,362
Total ..		4	20	521

or 116 grounds and 521 s.ft.